அமைக்க வேண்டுமென்று விரும்பினாலும்கூடப் பல்கலைக் கழகத்தின் அனுமதிபெற்று உதவிக்காக அரசாங்கத்தை அணுகினால் முறைப்படி கவனிக்கப்படும். இப்போது உள்ள 14 தமிழ்க் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்களே தமிழகத்தின் தேவைக்குப் போதுமானது. மேலும் தமிழ்க் கல்லூரிகளை இப்போது ஆரம்பித்தால் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் வேலையில்லாத் திண்டாட்டந்தான் எற்படும்.

துவக்கப் பள்ளிகள்

*195 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

துவக்கப்பள்ளிகளுக்குரிய பாடப் புத்தகக் குழுவில் துவக்கப் பள்ளி ஆசிரியர்களும் இடம் பெறச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தொடக்கநிலைப் பள்ளிகளுக்கென்றே தனிப்பட்ட பாடப்புத்தகக் குழு எதுவும் இல்லை. தொடக்க நிலைப்பள்ளிகளையும் சேர்த்து ஏற்பளிக்கப் பட்ட பள்ளிகள் அனைத்தின் தேவையையும் இப்பொழுது இருக்கும் பாடப்புத்தகக் குழு நிறைவு செய்கிறது. தொடக்க நிலைப் பள்ளிகளுக்கென்றே தனிப்பட்ட பாடப்புத்தகக் குழு இல்லாததால், இவ் வினா எழவில்லை.

*196 வினா.—திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளுக்குப் பாடத்திட்டம் வகுப்பது யார்?

(இ) தற்போதுள்ள பாடத் திட்டம் ஆரம்பப்பள்ளி மாணவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டு உள்ளதால் அதனைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அவ்வப் பொழுது அமைக்கப்படும் தகுதியான குழுக்களால் வகுக்கப்பட்டு சர்க்கார் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

(இ) மாறுதலைக் கோரி எவ்வித முறையீடுகளும் கிடைக்கப் பெறவில்லை. அதனால் இக்கேள்விக்கு இடமில்லை.

*197 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடிக்கடி பள்ளிகளில் பாடத்திட்ட முறைகளை மாற்றம் செய்வதால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) பாடத் திட்ட முறைகளில் எவ்வித மாற்றமும் அடிக்கடி செய்யப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : துவக்கப் பள்ளிகளுக்கென தனிக் கல்விக் குழு இல்லையென அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக நியமிக்கப்பட்டிருக்கும் குழுவில் துவக்கப்பள்ளி ஆசிரியர்களையும் சேர்த்துக்கொள்வதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கேள்வி போய் மூன்று கேள்விகள் ஆகிவிட்டன. இந்தக் கேள்வியோடு தொடர்புடைய கேள்வியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியும் சேர்ந்து மூன்று கேள்விகளும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கின்றன.

திரு. வை. சுவாமிநாதன் : ஒரு பாடத் திட்டம் வகுக்கப் பட்டால் குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது மாற்றம் இல்லாமல் இருந்தால்தான் சவுகரியமாக இருக்கும். பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரை ஏப்ரல் மாதத்திற்குள் முடிவுசெய்து பள்ளிக் குழந்தைகளுக்கு விரைவில் கிடைப்பதற்கு, பள்ளிக்கூடம் திறந்த வுடன் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். பாடத்திட்டம் அவ்வப்போது மாறுகின்ற காரணத்தால் பள்ளிக்கூடம் திறந்து பல மாதங்கள் ஆகியும் புத்தகம் கிடைக்க முடியாத நிலைமை இருக் கிறது. ஆகவே, ஒரு புத்தகம் வைத்தால் ஐந்தாண்டுகளுக்கு மாற்றாமல் இருக்க வேண்டுமென்னும் முறைபற்றி அரசாங்கம் பரி சீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கூடுமான வரையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு புத்தகம் இருக்க வேண்டுமென்ற முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசே பாடப் புத்தகங்களைப் பதிப்பிப்பது என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருப் பதும் அந்த நிலையில்தான். இந்த முறையில் வருங்காலத்தில் பாடத் திட்டம் வகுக்கப்படும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, text-books should be written by scholars who have taught lessons in the elementary schools; but nowadays we find that professors and others in colleges are writing text-books and they do not know the difficulties of the elementary school teachers and what they should teach. Therefore, will the Hon. Minister be pleased to include some of the elementary school teachers having good qualifications in the preparation of text books for elementary schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துவக்கப் பள்ளிக் கான புத்தகங்களை துவக்கப்பள்ளி ஆசிரியர்கள்தான் எழுத வேண்டுமென்பது இல்லை. மேல் வகுப்புகளை நடத்துகின்றவர் களும் தொடர்ந்து பல்வேறு புத்தகங்களை எழுதி அனுபவம் இருக் கின்ற காரணத்தால் பிள்ளைகளின் மன நிலை, மற்ற நிலைமைகளுக்

கேற்ப துவக்கப் பள்ளிகளுக்கான புத்தகங்களை எழுதுவதிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். அதனால் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் எழுதக் கூடாது என்பது அல்ல. அவர்கள் எழுதிய புத்தகங்களும் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய அளவுக்குத் தகுதி பெற்றிருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. டி. மார்டின் : மேலை நாடுகளில் விஞ்ஞானம் வியத்தகு முன்னேற்றம் அடைந்து வரும் நேரத்தில் நாம் பழைய சிலபசையே வைத்துப் பாடம் நடத்துவதை விட்டு விட்டு, மேலை நாடுகளிலிருந்து புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்து, அவற்றைத் தமிழாக்கம் செய்து, அந்தந்த வகுப்புகளில் புகுத்தும் முறையை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பழைய சிலபசை வைத்துக் கொண்டில்லை. ஐம்பது ஆண்டு, அறுபது ஆண்டு காலத்திற்கு முன்பு வகுக்கப்பட்ட சிலபஸின் அடிப்படையில் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. அவ்வப்போது ஆராய்ந்து, இருக்கிற சூழ்நிலைக்கேற்ப எந்த அடிப்படையில் பாடத் திட்டம் இருக்க வேண்டுமென்று வகுத்துத் தருகிறார்கள். அந்தப் பாடத் திட்ட அடிப்படையில்தான் ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். அதுதான் நடைமுறைக்கு வருகிறது. மாணவர்களுக்கு விஞ்ஞான அறிவு அதிகமாக ஆக வேண்டுமென்பதற்காக இந்திய அரசின் துணையோடு இந்த மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான திட்டங்களைத் தொடர்ந்து நீட்டி வருகின்றது.

திரு. கரு. சீமைச்சாமி : ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை பாடப் புத்தகங்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுதல் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரே பாடப் புத்தகமாக வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த முயற்சியின் அடிப்படையில் அரசே முதல் வகுப்பில் இருந்து பத்தாவது வகுப்பு வரை பாடப் புத்தகங்களைப் போடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள்

*198 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரம் நகராட்சி பராமரிப்பிலுள்ள உயர்நிலைப்பள்ளிகள் இரண்டையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.